ஈரோடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு.கோ.சுப்பாராவ்,எம்.எஸ்.சி ,பி.எட்.,எம்.பில்.,
மூ.மு.எண்.8655 /ஆ 1/2024 நாள். 07.04.2025

பொருள் : பள்ளிக் கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன்முறை- தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு 24-07-2022 அன்று நடத்திய தொகுதி-4 தேர்வின் மூலம் இளநிலை உதவியாளராக பணிநியமனம் – பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடுதல் – தொடர்பாக

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக்கல்வித் (ப.க.1(1)) துறை நாள் 09.09.2022.
2. ஈரோடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் ந.க.எண்.07478/ ஆ1/2023 நாள்.27-09-2023
3. நல்லூர் அரசுஉயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியரின் ந.க.எண்.235/2024 நாள் 04-11-2024

-----

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு 24-07-2022 அன்று நடத்திய தொகுதி-4 தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு பார்வை (2) ன்படி, ஈரோடு மாவட்டம், நல்லூர், அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.பெ.சுப்பிரமணியன் என்பாருக்கு பார்வை (3) இன் படி சார்ந்த பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து பெறப்பட்ட கருத்துரு மற்றும் பரிந்துரையின் படி கீழ்கண்டவாறு கலம் (5)இல் குறிப்பிட்டுள்ள நாளில் இளநிலை உதவியாளர் பதவியில், பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

| வ.எண் (1) | தேர்வாணையப் பட்டியலில் வரிசை எண் (2) | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் / பள்ளி (3) | இளநிலை உதவியாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாள் (4) | இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன் முறை செய்யப்படும் நாள் (5) |
|---|---|---|---|---|
| 1 | 234 | திரு.பெ.சுப்பிரமணியன், இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப் பள்ளி நல்லூர் , ஈரோடு மாவட்டம். | 29-09-2023 முற்பகல் | 29-09-2023 முற்பகல் |

இப்பணிவரன்முறை ஆணை பின்வரும் விதிகளுக்குட்பட்டது.

1. சார்ந்த பணியாளர் பத்தாம் வகுப்பில் தமிழை ஒரு பாடமாகப் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இல்லையெனில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலை தேர்வில் பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

(த.பி.பா)

2. இப்பணியாளர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவர். தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சினையும், துறைத் தேர்வான தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் (தேர்வுக் குறியீட்டு எண்.172) தேர்விலும் கண்டிப்பாக தேர்ச்சி பெற வேண்டும். மேலும் தனியருடைய தகுதிகாண் பருவம் அதிகப்படியாக 5 ஆண்டுகள் வரை மட்டுமே நீட்டிக்கப்படும் எனவும், துறைத் தேர்வில் இக்காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறினாலும்,பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெறுவதில் (நிருவாக காரணம் தவிர்த்து) தனியரால் காலதாமதம் ஆகும் நேர்வுகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர்(பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 33 (4) இன் படி இப்பணிநடுநர் அரசுப் பணியிலிருந்து பணி நீக்கம்செய்யப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பணிவரன்முறைபடுத்தப்பட்டது சார்பான பதிவுகளை சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உடன் பதிவு செய்யப்பட்ட விவரம் மற்றும் இத்துடன் இணைத்து அனுப்பப்படும் அசல் பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலினை அனுப்பி வைக்குமாறும் சார்ந்த தலைமையாசிரியருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – அசல் பணிப்பதிவேடு – 1 பைண்டிங்

முதன்மைக் கல்வி அலுவலர்
ஈரோடு

பெறுநர் : சார்ந்த பணியாளர் ( உரிய வழியாக)

நகல் : தலைமையாசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
நல்லூர்,ஈரோடு மாவட்டம்
(பணியாளருக்கான கூடுதல் நகலுடன்)